# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 41/3 — 1973 ජනවාරි 08 වැනි සඳුද — 1973.01.08

41/3 ம் இலக்கம் — 1973 ம் ஆண்டு சனவரி மாதம் 08 ந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

எல். டி. பி 177 அ/31

### புகையிரதக் கட்டளைச் சட்டம்

நிதியமைச்சரது ஒருப்பாட்டுடன் போக்குவரத்து அமைச்சரால் (200 ஆம் அத்தியாயமான) கட்டளைச் சட்டத்தின், 3, 4அ என்னும் பிரிவுகளால் தனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு ஆக்கப்பட்ட விதி.

லெஸ்லி குணவர்த்தன,
போக்குவரத்து அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஜனவரி மீ 4 ந் உ.

விதி

காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறு 1926 ம் ஆண்டு பெப்பிருவரி, 26 ம் திகதிய 7,514 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியின் குறை நிரப்பியில் பிரசுரிக்கப்பட்ட பிரயாணிகள், பண்டப் போக்குவரத்து, பண்டங்களின் வீதவரி, பண்டங்களை இனமாகப் பிரித்தல் என்பனவற்றிற்காகிய விதிகள், 1973 ஜனவரி 15 ம் திகதியிலிருந்து பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றன :

(அ) பிரயாணிகள் புகையிரதத்தின் மூலம் நடைபெறும் போக்குவரத்தைப் பற்றிக் கூறும் பாகத்தில்—

(1) " பிரயாணிகள் " என்னும் தலைப்பின் கீழ்—

(அ) விதிகள் 20 ஐயும் 27 (ஆ) வையும் விட்டுவிடுதல் மூலமும் அத்துடன்

(ஆ) விதி 29 ல் பந்தி (ஆ) விற்குப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்தல் மூலமும்

(இ) பருவச் சீட்டொன்றை வைத்திருப்பவர் தனது பருவச் சீட்டில் 28 இருத்தல் பயணப் பொதியை விதிப்பனவின்றிக் கொண்டு செல்ல அனுமதிக்கப்படுவர்.

(2) " பிரயாணிகள் பயணப் பொதி " என்னும் தலைப்பின் கீழ்—விதி 33 ல்—

(அ) பந்தி (ஊ) வில்—

(i) " 112 " என்னும் இலக்கத்திற்காக " 84 " என்னும் இலக்கத்தையும்,

(ii) " 84 " என்னும் இலக்கத்திற்காக " 70 " என்னும் இலக்கத்தையும், அத்துடன்

(iii) " 70 " என்னும் இலக்கத்திற்காக "56" என்னும் இலக்கத்தையும்,

(ஆ) (ஊ) என்னும் பந்தியின் உட்பந்தி (ii) ல் " அதாவது வைத்திருக்கும் முதலாம் வகுப்புச் சீட்டொன்றிற்கு 2 அந்தர், இரண்டாம் வகுப்புச் சீட்டொன்றுக்கு 1 அந்தர் 2 குவாட், மூன்றும் வகுப்புச் சீட்டொன்றுக்கு 1 அந்தர் 1 குவாட் " என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக " அதாவது வைத்திருக்கும் முதலாம் வகுப்புச் சீட்டொன்றுக்கு 1 அந்தர் 2 குவாட், இரண்டாம் வகுப்புச் சீட்டொன்றுக்கு 1 அந்தர் 1 குவாட், மூன்றும் வகுப்புச் சீட்டொன்றுக்கு 1 அந்தர் " என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுதல் மூலமும்.

(3) பொதிகள் " என்னும் தலைப்பின் கீழ்—

(அ) விதி 50 ல் பந்தி (1) (அ) விற்காகப் பின்வரும் புதிய பந்தியைப் பதிலீடு செய்தல் மூலமும்,

(ஆ) குதிரைகளும் வண்டிகளும் அவற்றிற்கு ஏற்படும் அபாயங்களுக்குச் சொந்தக்காரர் பொறுப்பேற்கும் நிலையில் கொண்டு செல்லப்படும் அவற்றைப் போக்குவரத்துச் செய்வதற்காகிய வீதங்களாவன :

| | மைல் ஒன்றுக்கு ரூ. ச. |
|---|---|
| ஒரு குதிரை .. .. .. .. .. | 1 10 |
| இரு குதிரைகள் .. .. .. .. .. | 1 20 |
| மூன்று குதிரைகள் .. .. .. .. .. | 1 35 |
| நான்கு குதிரைகள் (களனிப்பள்ளத்தாக்குப் பாதையில்) .. .. | 1 65 |
| நான்கு குதிரைகள் (களனிப்பள்ளத்தாக்குப் பாதையில்லாத ஏனைய பாதைகள்) .. | 2 40 |
| ஐந்து குதிரைகள் .. .. .. .. .. | 2 55 |
| ஆறு குதிரைகள் .. .. .. .. .. | 2 65 |
| ஒரு வண்டி .. .. .. .. .. | 1 10 |
| இரு வண்டி .. .. .. .. .. | 1 35 |
| போகிப்பார வண்டிகளில் இரண்டும் அதற்கு மேற்பட்ட வண்டிகளும் .. .. | 2 65 |

ஆயின் எப்படியாயினும் ஒரு குதிரைப் பெட்டியினது அல்லது புகைவண்டிப் பாரப் பெட்டியின விதிப்பனவுத் தொகையான (4) நாலு சில்லுப் பாரவண்டி பாவிக்கப்படின் 30 ரூபாவிற்கும் போகிப்பா வண்டி பாவிக்கப்படின் 60 ரூபாவிற்கும் குறைவானதாயிருத்தல் ஆகாது.

(ii) பந்தி (உ) வில்—

(அ) ரூபா 25 என்னும் சொல்லுக்கும் இலக்கத்திற்கும் பதிலாக ரூபா 30 என்னும் சொல்லையும் இலக்கத்தையும்,

(ஆ) ரூபா 6.25 என்னும் சொல்லுக்கும் இலக்கத்திற்கும் பதிலாக ரூபா 7.50 என்னும் சொல்லையும் இலக்கத்தையும்,

(இ) ரூபா 50 என்னும் சொல்லுக்கும் இலக்கத்திற்கும் பதிலாக ரூபா 60 என்னும் சொல்லையும் இலக்கத்தையும் அத்துடன்

(ஈ) ரூபா 12.50 என்னும் சொல்லுக்கும் இலக்கத்திற்கும் பதிலாக ரூபா 15.00 என்னும் சொல்லையும் இலக்கத்தையும் இடுதல் மூலம்.

(iii) பந்தி (ஊ) வில்—

(அ) ரூபா 6.25 என்னும் சொல்லுக்கும் இலக்கத்திற்கும் பதிலாக ரூபா 7.50 என்னும் சொல்லையும் இலக்கத்தையும், அத்துடன்

(ஆ) ரூபா 12.50 என்னும் சொல்லுக்கும் இலக்கத்திற்கும் பதிலாக ரூபா 15.00 என்னும் சொல்லையும் இலக்கத்தையும் இடுதல் மூலம்

(இ) விதி 51. ல் பந்தி (ஆ) விற்காகப் பின்வரும் புதிய பந்தியைப் பதிலீடு செய்தல் மூலம் (ஆ) (ஊ) என்னும் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டது தவிர மின்சாரம், வாயு, எண்ணெய், பெற்றோல் முதலியவற்றைக் கொண்டு மோட்டார் வாகனங்களை அபாயங்களுக்கு சொந்தக்காரர் பொறுப்பேற்கும் நிபந்தனையின் பேரில் கொண்டு செல்வதற்கான விதிப்பனவு பின்வரும் வீதங்களில் இருத்தல் வேண்டும் :

| | மைல் ஒன்றுக்கு ரூ. ச. |
|---|---|
| சாதாரண பார வண்டியில் ஒரு மோட்டார் கார் .. .. .. | 1 0 |
| போகிப் பார வண்டியில் ஒரு மோட்டார் கார் .. .. .. .. | 2 0 |
| ஒரு போகிப் பார வண்டியில் இரு மோட்டார் கார் .. .. .. | 3 0 |
| ஒரு சாதாரண பார வண்டியில் ஒரு மோட்டார் காரும் ஒரு வண்டியும் .. .. | 1 20 |
| ஒரு போகிப் பார வண்டியில் ஒரு மோட்டார் காரும் ஒரு வண்டியும் .. .. | 2 40 |
| ஒவ்வொரு மோட்டார் சைக்கிள் .. .. .. .. | 0 25 |
| மூன்வண்டி அல்லது பக்கக்காரைக் கொண்ட ஒவ்வொரு மோட்டார்ச் சில்லுச் சைக்கிள் அல்லது மோட்டார் சைக்கிள் .. .. .. .. .. | 0 56 |
| ஒவ்வொரு மோட்டார் சைக்கிள் அல்லது மோட்டார் ஸ்கூட்டர் .. .. .. | 0 14 |

எவ்வாறுயினும் இத்தகைய வாகனங்களை ஏற்றியிறக்குவதற்கான விதிப்பனவுகளின் தொகையானது பின்வருவனவற்றிலும் பார்க்கக் குறைவானதாக இருத்தல் ஆகாது :

| | நான்கு சில்லுப் பார வண்டி பாவிக்கப்படின் ரூ. ச. | | போகி (எட்டுச் சில்லு) பார வண்டி பாவிக்கப்படின் ரூ. ச. |
|---|---|---|---|
| இரு மோட்டார் கார்கள் .. .. | 30 0 | .. | 60 0 |
| ஒரு மோட்டார் காரும் ஒரு வண்டியும் .. .. | 30 0 | .. | 60 0 |
| மோட்டார் சைக்கிள், மோட்டார் ஸ்கூட்டர் அல்லது தன்னியக்கச் சைக்கிள் ஒவ்வொன்றும் .. .. | 7 50 | .. | 15. 0 |
| மூன்வண்டி அல்லது பக்கக்காரைக் கொண்ட ஒவ்வொரு மோட்டார் மூச்சில்லுச் சைக்கிள் அல்லது மோட்டார் சைக்கிள் .. .. .. | 15 0 | .. | 30 0 |

(இ) விதி 53 ல்—

(i) " 90 சதங்கள் " என்னும் இலக்கத்திற்கும் சொல்லுக்கும் பதிலாக " ரூபா 1.10 " என்னும் இலக்கத்தையும் சொல்லையும்,

(ii) " ரூபா 1.00 " என்னும் சொல்லுக்கும் இலக்கத்திற்கும் பதிலாக " ரூபா 1.20 " என்னும் சொல்லையும் இலக்கத்தையும்,

(iii) " ரூபா 1.10 " என்னும் சொல்லுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக " ரூபா 1.35 " என்னும் சொல்லையும் இலக்கங்களையும், அத்துடன்

(iv) " ரூபா 25 " என்னும் சொல்லுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக " ரூபா 30 " என்னும் சொல்லையும் இலக்கங்களையும் இடுதல் மூலமும்,

(ஈ) விதி 54 ல் பந்தி (அ) வில் " 80 சதம் " என்னும் இலக்கத்திற்கும் சொல்லுக்கும் பதிலாக " ரூபா 1.00 " என்னும் சொல்லையும் இலக்கத்தையும் இடுதல் மூலமும்.

(உ) விதி 55 ல்—

(i) " 4½ சதம் " என்னும் இலக்கத்திற்கும் சொல்லுக்கும் பதிலாக " 5½ சதம் " என்னும் இலக்கத்தையும் சொல்லையும், அத்துடன்

(ii) " ரூபா 1.25 " என்னும் சொல்லுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக " ரூபா 1.50 " என்னும் சொல்லையும் இலக்கங்களையும் இடுதல் மூலமும்.

(ஊ) விதி 56 ல் " ரூபா 5 " என்னும் சொல்லுக்கும் இலக்கத்திற்கும் பதிலாக " ரூபா 6 " என்னும் சொல்லையும் இலக்கத்தையும் இடுதல் மூலமும்.

(எ) விதி 57 ல் " ரூபா 2.50 " என்னும் சொல்லுக்கும் இலக்கத்திற்கும் பதிலாக " ரூபா 3 " என்னும் சொல்லையும் இலக்கத்தையும் இடுதல் மூலமும்.

(ஏ) விதி 59 ல்—

(i) " ரூபா 1.65 " என்னும் சொல்லுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக " ரூபா 2 " என்னும் சொல்லையும் இலக்கத்தையும், அத்துடன்

(ii) " ரூபா 25 " என்னும் சொல்லுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக " ரூபா 30 " என்னும் சொல்லையும் இலக்கங்களையும் இடுதல் மூலமும்.

(ஐ) விதி 60 ல்—

(i) (ஊ) என்னும் பந்தியின் உட்பந்தி (i) ல் " 15 " என்னும் இலக்கத்திற்குப் பதிலாக " 20 " என்னும் இலக்கத்தையும்,

(ii) (ஊ) என்னும் பந்தியில் (உட்பந்தி) (ii) ல் " 30 " என்னும் இலக்கத்திற்குப் பதிலாக " 35 " என்னும் இலக்கத்தையும், அத்துடன்

(ஊ) என்னும் பந்தியின் உட்பந்தி (iii) ல் " 60 " என்னும் இலக்கங்களுக்குப் பதிலாக " 75 " என்னும் இலக்கங்களையும் இடுதல் மூலமும்.

(4) தலைகு பயணப் பொதி என்னும் தலைப்பின் கீழ்—

(அ) விதி 61 ல்—

(i) பந்தி (அ) வில்—

(அ) " 15 சதங்கள் " என்னும் இலக்கங்களுக்கும் சொல்லுக்கும் பதிலாக " 20 சதங்கள் " என்னும் இலக்கங்களையும் சொல்லையும்,

(ஆ) " 10 சதங்கள் " என்னும் இலக்கங்களுக்கும் சொல்லுக்கும் பதிலாக " 15 சதங்கள் " என்னும் இலக்கங்களையும் சொல்லையும், அத்துடன்

(இ) " 35 சதங்கள் " என்னும் இலக்கங்களுக்கும் சொல்லுக்கும் பதிலாக " 45 சதங்கள் " என்னும் இலக்கங்களையும் சொல்லையும் இடுதல் மூலமும்.

(ii) பந்தி (ஆ) வில்—

(அ) " 75 சதங்கள் " என்னும் இலக்கங்களுக்கும் சொல்லுக்கும் பதிலாக " 90 சதங்கள் " என்னும் இலக்கங்களையும் சொல்லையும், அத்துடன்

(ஆ) " 30 சதங்கள் " என்னும் இலக்கங்களுக்கும் சொல்லுக்கும் பதிலாக " 35 சதங்கள் " என்னும் இலக்கங்களையும் சொல்லையும் இடுதல் மூலமும்.

(5) இறந்த அல்லது உரிமைகோரா ஆதனம் என்னும் தலைப்பின் கீழ்—
விதி 62 ல் பந்தி (ஆ) வில் " 50 சதங்கள் " என்னும் இலக்கங்களுக்கும் சொல்லுக்கும் பதிலாக " 60 சதங்கள் " என்னும் இலக்கங்களையும் சொல்லையும் இடுதல் மூலம்.

(ஆ) பண்டப் போக்குவரத்தைப் பற்றிக் கூறும் பாகத்தில்—

(1) விதி 10 ல் பந்திகள் (எ) (V) ல் " 50 சதங்கள் " என்னும் இலக்கங்களுக்கும் சொல்லுக்கும் பதிலாக " ரூபா 1 " என்னும் சொல்லையும் இலக்கத்தையும் இடுதல் மூலமும்.

(2) விதி 11 ல் பந்திகள் (அ) (ஆ) (இ) என்பனவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்திகளை இடுதல் மூலம் :

(அ) தனியானதும் வேறானதுமான 112 இறாத்தல்களுக்குக் குறைந்த நிறையைக் கொண்ட பொதிகள் பண்டங்களாக ஏற்கப்பட்டு 112 இறாத்தல் கணக்கிற்குக் கட்டணம் விதிக்கப்படும்.

(ஆ) பண்டங்களது நிறையில் ஓர் அந்தரின் ஒவ்வொரு பின்னப்பகுதியும் 112 இறாத்தலெனவே கணிக்கப்படும்.

(இ) அனுப்பும் பொருட் பண்டத்தின் ஆகக் குறைந்த கட்டணம் ரூபா 1.00 ஆகும்.

(3) விதி 23 ல் பந்தி (அ) வில்—

(அ) (i) " ரூபா 3 " என்னும் சொல்லுக்கும் இலக்கத்திற்கும் பதிலாக " ரூபா 5 " என்னும் சொல்லையும் இலக்கத்தையும்,

(ii) " ரூபா 15 " என்னும் சொல்லுக்கும் இலக்கத்திற்கும் பதிலாக " ரூபா 25 " என்னும் சொல்லையும் இலக்கத்தையும், இடுதல் மூலமும்.

(iii) இத்தகைய இரண்டு கால எல்லைகளைப் பூரணப்படுத்திய பின்னர் சுமைவண்டியை மேலும் தாமதிக்கும் சந்தர்ப்பத்தில் தாமதக் கட்டணமானது, விடயத்துக்கேற்ப ஒவ்வொர் எட்டு மணித்தியாலங்களில் பூரணப்படுத்தப்படும் ஆறு மணித்தியாலங்களைக் கொண்ட மேலும் ஒவ்வோரு காலத்துக்கும் ஆகக் கூடிய தொகை 40 ரூபா என்பதற்கமைய ஒரு மணித்தியாலத்திற்கு அல்லது அதன் பாகத்திற்கு 8 ரூபாவாகவிருக்கும்.

(ஆ) பந்தி (எ) யிற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தி (எ) யை இடுதல் மூலமும்.

(எ) பாரமேற்றுதலுக்கென இரவும் குறிப்பாக மாலை 4 மணிக்கு அல்லது அதற்குப் பின்னரும் மறுநாட் காலை 4 மணிக்கு முன்னரும் பாரமேற்றப்படாத சுமை வண்டிகள் வழங்கப்படும் பொழுது சுமைவண்டி விடப்பட்ட நேரத்திற்கும் காலை 4 மணிக்கும் இடைப்பட்ட முழு நேரப் பகுதிக்கும் சுமைவண்டி ஒன்றுக்கு ஆகக் கூடிய தொகை 25 ரூபா என்பதற்கமைய ஒரு வேலை மணித்தியாலம் அல்லது அதன் பகுதி நேரத்திற்கு சுமைவண்டி ஒன்றுக்கு ரூபா 5 என்ற வீதப்படி தாமதக் கட்டணம் அறவிடப்படும்.

(4) விதி 33 ல் பந்தி (உ) இன் உட்பந்தி (i) ல் " ரூபா 15 " என்னும் சொல்லுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக " ரூபா 25 " என்னும் சொல்லையும் இலக்கத்தையும் இடுதல் மூலமும்.

(5) விதி 36 ல் " ரூபா 15 " என்னும் சொல்லுக்கும் இலக்கத்திற்கும் பதிலாக " ரூபா 25 " என்னும் சொல்லையும் இலக்கத்தையும் இடுதல் மூலமும்.

1—470

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.